மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அங்குள்ள விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் அதிர்ச்சி ஏற்படுவதாகத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்தப் பறவையாவது அத்தகைய குறிப்பை அனுப்பி இருந்தால் அதை மன்றத்திற்குக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். அந்த மிருகக் காட்சி சாலையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. டி. மார்டின் : இந்த விலங்கு காட்சி சாலைக்கு பள்ளிகளில் இருந்து நிர்வாகத்தினர் பொறுப்பில் மாணவர்கள் எல்லோரும் ஒட்டு மொத்தமாகச் செல்லுகின்ற நேரத்தில் அவர்களுக்கு கட்டணம் வாங்காது உள்ளே அனுமதிக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. மு. ச. சிவசாமி : சிறுவர் ரயில் வண்டித் திட்டம் இப்போது அங்கு அமலுக்கு வந்து ஓடிக் கொண்டிருக்கிறதா ? இல்லையென்றால் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நம்முடைய பெருமைக்குரிய மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு, தற்போதைய முதலமைச்சர் அவர்களால் 22—10—1968-ம் தேதியன்று துவக்கி வைக்கப்பட்டது.

Mahamanam at Kumbakonam

* 142 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have sanctioned a sum of nearly Rs. 6 lakhs for the formation of a ring road around Kumbakonam in connection with the Mahamaham festival held in the month of February 1968;

(*b*) whether the amount was sanctioned as a grant to the respective panchayats in which the roads are formed or as a loan or as subsidy; and

(*c*) whether a sum of Rs. 2 lakhs was sanctioned as a loan to the Kumbakonam Municipality in connection with the festival?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1968 பெப்ரவரித் திங்களில் நடைபெற்ற மகாமகம் திருவிழா குறித்து கும்பகோணத்தைச் சுற்றிலும் வட்டச் சாலைகள் அமைப்பதற்காக இப்போது செயல்படாத தஞ்சாவூர் மாவட்ட வாரியத்தில் உள்ள ரொக்க இருப்பிலிருந்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ரூ. 5 லட்சம் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் அனுமதித்தது.

(இ) இவ் வினா எழவில்லை.

(உ) மகாமகம் திருவிழா குறித்து மாநில நிதிகளிலிருந்து கும்பகோணம் நகராட்சி மன்றத்திற்கு ரூ. 74,855 கடனும், திருப்பித் தரத் தக்க முன் பணம் ரூ. 2 லட்சமும் வழங்கப்பட்டன.

திரு. நா. காசிராமன் : இரண்டு லட்சம் ரூபாய் இந்த விழாச் செலவிற்காக கடனாக வழங்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிட்டத்தட்ட 1½ லட்சம் ரூபாய் திருப்பித் தரப்பட்டு விட்டது. மீதம் உள்ள தொகையை—எகப்பட்ட செலவு ஆகிவிட்டபடியால்—நகராட்சிக்குத் தள்ளிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கும்பகோணம் நகராட்சிக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபாயில் ஒரு லட்சத்து எழுபதாயிரம் ரூபாய் திருப்பித் தரப்பட்டு விட்டது. மீதி 30,000 ரூபாயைப் பொறுத்தவரை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. கும்பகோணம் நகராட்சித் தலைவரும், இந்த மன்ற உறுப்பினருமான அவர்கள் கேட்டுக் கொண்ட அந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனர் : ஏற்படுத்தப்பட்ட அந்த வட்டச் சாலைகளைத் தொடர்ந்து பராமரிக்கும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிக் குறிப்பாகத் தகவல் இல்லை. ஊராட்சி மன்ற ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படலாம்.

* 143 *Q.*—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any representation has been received in 1968 from the Municipal Council, Kumbakonam for conducting a raffle to meet Mahamaham expenditure; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இச் செயற்குறிப்பு ஏற்கப்படவில்லை.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : அனைத்திந்தியாவிலும் இருந்து மக்கள் லட்சக் கணக்கில் குழுமிய காரணத்தால் கும்பகோணம் நக ராட்சிக்குப் பெரும் செலவு ஏற்பட்டிருக்கிறது. அந்தச் செலவை ஈடுகட்ட மானியமாவது கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே சொன்னேன். தேவையான, நேரத்தில் தேவையான மானியத்தை நிதி நிலைக்குத் தக்கபடி அரசாங்கம் கொடுத்திருப்பதை கும்பகோணம் நகராட்சித் தலைவர் அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். அந்தச் செலவை ஈடு கட்டுவதற்காக பரிசுத் திட்டம் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்கவில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பரிசுத் திட்டம் நடத்த வேண்டு மென்று அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருக்கிறதா ? அரசாங்கம் என்ன தாக்கீது அனுப்பியது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கேள்வி கும்பகோணம் நகராட்சி யைப் பற்றியது.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமக விழாவிற்காக செலவான தொகை 5 லட்சம் ரூபாயை சர்க்கார் கொடுத்ததா அல்லது அந்த மாவட்ட பஞ்சாயத்து யூனியன்கள் வசூல் செய்ததா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஐந்து லட்சம் ரூபாய் மாவட்டக் கழகத்தில் இருந்து கணிக்கப்பட்ட இருப்பு நிதியிலிருந்து செலவு செய்வதற்கான அனுமதியை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த அரசாங்கம் ஏற்கனவே அனுப்பியது.

திரு. நா. காசிராமன் : கும்பகோணம் நகராட்சியால் பரிசுத் திட்டம் நடத்த வேண்டுமென்று கேட்கப்பட்டது மகாமகம் விழாவிற்காக செல வான தொகையை ஈடுகட்டும் வகையில் வருவாயைப் பெற்றுக் கொள் வதற்காகத்தான் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதற்காகத்தான் கேட்கப்பட்டது. ஆனால் அந்தச் செயற்குறிப்பு ஏற்கப்படவில்லை.